## கல்வி அமைச்சு

**பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதல் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களை பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளல் - 2020/ 2021கற்கைஆண்டு**

2020/2021 கல்வியாண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொதுக் கல்வித் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. கலைப் பட்டப் பாடநெறி (ஆங்கிலத்தை ஒரு பாடமாக உள்ளடக்கியிருத்தல்)
II. விஞ்ஞானமாணிப் பட்டப் பாடநெறி (உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல் விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானம்)

02. விண்ணப்பதாரிகள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

I. கலைப் பட்டத்திற்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் ஆசிரியர்கள் 2016ம் ஆண்டு அல்லது அதற்கு பின்னர் நடாத்தப்பட்ட பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் (ஆங்கில பாடத்துடன் கூடிய) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

II. உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல் விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் ஆசிரியர்கள் 2016ம் ஆண்டு அல்லது அதற்கு பின்னர் நடாத்தப்பட்ட விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதல் கட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பப் படிவங்கள ் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்று ஆசிரியராக 5 வருடசேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்கவேண்டும்.

IV. ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவகத்திலோ பாடநெறிகளை தொடர்வதற்காகப் பதிவு செய்தவராக இருக்கக் கூடாது.

V. யாதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல் விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானம் போன்ற பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்படவேண்டி இருப்பின் அதற்காக க.பொ.த (உயர் தர) பரீட்சையில் அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதல் கட்டப் பரீட்சையில் அல்லது உரிய பல்கலைக்கழகத்தினால் அடிப்படை தகைமையாக கருதப்படும் பாடங்களில் உரிய சித்தியினை பெற்றிருத்தல் வேண்டும்.

VI. இப்பாடநெறியினை தொடர்வதற்கு தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்படவேண்டி இருக்கும் என்பதனால் கற்கை விடுமுறை பெற்றுக் கொள்ளக்கூடிய உரிமை கொண்ட ஆசிரியர்கள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்.

03. இதனடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகள் மற்றும் உரிய பாடங்களுக்குப் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலுமாகும்.

04. சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமைகள் பற்றி நேர்முகப் பரீட்சையின் போது வினவப்படும்.

05. பட்டம் பெற்றுக்கொண்ட பின்பு புபட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான பொறுப்பை இவ் அமைச்சு ஏற்றுக்கொள்ளாது.

06. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேவை செய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் அப் பாடசாலையின் அதிபர் / முகாமையாளரால் உரிய ஆசிரியருக்காக கற்கை விடுமுறை அனுமதிக்கப்பட முடியும் / முடியாது என்பது தொடர்பாக குறிப்பிடுதல் வேண்டும்.

07. அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினாலும், அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் உரிய அதிபர் / முகாமையாளர் ஆகியோராலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

சுகல விண்ணப்பப்படிவங்களும் இங்கு கீழே குறிப்பிடப்படுகின்ற மாதிரிப் படிவத்திற்கேற்ப தயாரித்து இரண்டு (02) பிரதிகளாக "செயலாளர், கல்விஅமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2021.09.03 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2020/2021 இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் (ஆசிரியர்களுக்காக)" என்றுகுறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.moe.gov.lk) விசேட அறிவித்தல்கள் பிரிவிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பேராசிரியர். கே. கபில சீ. கே. பெரேரா
செயலாளர்
கல்விஅமைச்சு